**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 09-02-2024**

**திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2024-02-09 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2024-02-10 | 2024-02-11 | 2024-02-12 | 2024-02-13 | 2024-02-14 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 31.0 | 31.0 | 32.0 | 32.0 | 33.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 24.0 | 23.0 | 23.0 | 24.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8 | 10 | 10 | 8 | 8 |
| காற்றின் திசை (கோணம்) | 90 | 50 | 50 | 70 | 90 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 2 | 2 | 0 | 3 | 1 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலையாக காணப்படலாம்; அதிகபட்ச வெப்பநிலை 31.0°C-33.0°C ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23.0°C-24.0°C ஆகவும் இருக்கலாம்; காற்றின் ஈரப்பதம் 50-90% வரை எதிர்பார்க்கப்படுகிறது; காற்றின் வேகம் மணிக்கு 8.0-10.0 கி.மீ வரை இருக்கலாம்; காற்றின் திசை வடகிழக்கு முதல் கிழக்கிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

14.02.2024 முதல் 20.02.2024 வரை தமிழ்நாட்டில் மழைப்பொழிவு இயல்பை விட குறைவாகவும், அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பு நிலையில் பதிவாகக்கூடும்.

## குறுஞ்செய்தி :

விவசாயிகள் மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்துத் பயிர்களுக்கு நீர் பாசனம் மேற்கொள்ளவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்போது நிலவும் வானிலை காரணமாக நெற்பயிரில் பின்வரும் பூச்சி மற்றும் நோய் தாக்கம் காணப்படலாம்;1. இலைப்பேன்- நாற்றங்கால் (20 சென்ட்) தியாமெதோக்ஸாம் 25% WG 4 கிராம் என்ற வீதம் 40 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கவும்; 2).தண்டுத்துளைப்பான்- ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 20% WP 50 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 3). இலை சுருட்டுப்புழு தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5% SC 60 கிராம் வீதம் அல்லது ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 4.செம்புள்ளி நோய் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு ப்ரோபிநெப் 70% WP 600-800 கிராம் அல்லது ஏக்கருக்கு ப்ரோபிநெப் 54.2% மற்றும் ட்ரைசைக்ளோசோல் 15 % WP கலந்து 500 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| உளுந்து | தற்போது நிலவும் வானிலை காரணமாக உளுந்துப்பயிரில் பின்வரும் பூச்சி மற்றும் நோய் தாக்கம் காணப்படலாம்; 1.மஞ்சள் தேமல் நோய் - ஏக்கருக்கு 5 முதல் 6 மஞ்சள் வண்ண ஒட்டும் பொறியினை அமைக்கலாம்; நோய் தாக்கப்பட்ட பயிரினை களைந்து அழிக்கவும்; இலை வழி தெளிப்பாக நொச்சியிலை சாறு 10 சதம் அல்லது வேம்பிலை சாறு 5 சதம் 30 நாட்கள் விதைப்பிற்குபின் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி லிட்டர் என்ற வீதம் கலந்து தெளிக்கலாம்; 2.புகையிலை புழு- ஏக்கருக்கு குளோரன்ட்ரானிலிப்ரோல் 18.5% SC 60 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு ஃப்ளூபெண்டமைடு 39.35% SC 40 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 3. இலைப்பிணைக்கும் புழு: ஏக்கருக்கு தியோடிகார்ப் 75 WP 250 மில்லி லிட்டர் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் (அல்லது) ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 39.35% SC 40 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| நிலக்கடலை | நிலக்கடலை- வளர்ச்சி நிலை- நிலவும் வானிலை காரணமாக நிலக்கடலை பயிர்களில் முன் பருவ இலைப்புள்ளி நோய் தாக்கம் காணப்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு கார்பன்டாசிம் 200 கிராம் அல்லது ஏக்கருக்கு குளோரோதலோனில் 400 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்; 2. சுருள்பூச்சி- ஏக்கருக்கு மெத்தில் டெமெக்டோன் 25 EC 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். இரவு 8 முதல் 11 மணி வரை விளக்கு பொறியினை ஒளிர செய்து கவர்ந்து அழிக்கலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | தற்போது நிலவும் வானிலை காரணமாக மிளகாய் பயிரில் பின்வரும் பூச்சி மற்றும் நோய் தாக்கம் காணப்படலாம்; 1. இலைப்பேன்- இமிடகிலோபிரிட் 17.8% SL 10 லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் அல்லது பைப்ரோனில் 5% SC 0.6 1 லிட்டர் தண்ணீருக்கு 1.5 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்; 2.பழ அழுகல் மற்றும் |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | நுனி கருகல் நோய்- காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 கிராம்15 நாட்கள் இடைவெளியில் 3 முறை வீதம் தெளிக்கலாம். |
| கத்திரிக்காய் | தற்போது நிலவும் வானிலை காரணமாக கத்தரி பயிரில் பின்வரும் பூச்சி மற்றும் நோய் தாக்கம் காணப்படலாம்; 1.சிற்றிலை அல்லது சிறு இலை நோய்- டைமெத்தோயேட் 30 EC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி லிட்டர் என்ற வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். மேலும் நோய் தாக்கப்பட்ட இலையினை அகற்றி விடலாம்; 2.காய்த் துளைப்பான்-வேப்பங்கொட்டை சாறு 5 சதம் அல்லது டைமெத்தோயேட் 30 % EC 10 லிட்டர் தண்ணீருக்கு 7 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கவும். |
| மாம்பழம் | மாமரம்- தத்துப்பூச்சி- தியாமெதோக்சம் 25WG 10 லிட்டர் தண்ணீருக்கு 1.0 கிராம் வீதம் அல்லது புப்ரோஃபெசின் 25 SC 1 லிட்டர் தண்ணீருக்கு 1.0 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கலாம். மற்றும் வேப்பெண்ணெய் 1 லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி லிட்டர் வீதம் கலந்து மேற்கொண்ட பூச்சி கொல்லி மருந்துடன் கலந்து தெளிக்கலாம். பூக்கள் பூக்க தொடங்கியவுடன் முதல் தெளிப்பும் இரு வார இடைவெளிக்கு பின் இரண்டாம் தெளிப்பினை மேற்கொண்டு தத்துப்பூச்சி தாக்கத்தினை கட்டுப்படுத்தலாம். |